**தலைப்பு 238 - அரசிறைக் கொள்கைத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 238 - அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தம்பர் 18 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 77.35 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 53.14 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 24.21 மில்லியன் அதாவது 31.30 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 74.75 | 52.00 | 22.75 | 30.43 |
| மூலதனம் | 2.60 | 1.14 | 1.46 | 56.15 |
| **மொத்தம்** | **77.35** | **53.14** | **24.21** | **31.30** |

## 2.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டிற்காக 02 வருமானக் குறியீடுகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 5,000.00 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 8,029.97 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 160.60 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | மிகை மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.02.10.00 | - | 3,029.97 | 3,029.97 | - |
| 20.05.01.00 | 5,000.00 | 5,000.00 | - | - |
| **மொத்தம்** | **5,000.00** | **8,029.97** | **3,029.97** | **60.6** |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

திணைக்களத்திற்குரிய 23801 ஆம் விடய இலக்கமுடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 3.00 | 2.96 | 1.3 | 1.78 | 12.00 | 7.62 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டு கணக்கு

#### 3.1.1 பாதீட்டு முரண்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு மில்லியன் நிதியேற்பாட்டில் எதுவித பயன்பாடும் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 9 செலவின விடயங்களுக்காக மிகை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு, ஏற்பாடு செய்யப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் 12 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

### 3.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவர், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 02 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) 10.02.10.00 ஆம் வருமானக் குறியீடு - சமூகப் பொறுப்பு வரி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 திசெம்பர் 22 ஆந் திகதிய 254/2016 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான வருமானக் கணக்கு 2017 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டிற்கான வருமானக் கணக்கு 2017 ஏப்ரல் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) வருமானக் கணக்கிற்குரிய 2016 ஆம் ஆண்டிற்கான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 9.00 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(iii) வருமானக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தொகைகளும் திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்படுவதாக பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், வருமானக் கணக்கிற்கமைய 2016 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 3,029,972 ஆக இருந்த போதிலும், திறைசேரியின் கணனி அச்சீட்டுக் குறிப்புக்களுக்கமைய அது ரூபா 8,999,016 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 5,969,044 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(iv) நிதிப்பிரமாணம் 128(2)(இ) மற்றும் யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 08 ஆம் பந்திக்கமைய, 2016 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டிற்கான சமூக பொறுப்பு வரிக்குரிய நிலுவை அறிக்கை, 2016 யூலை 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 2017 சனவரி 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதிக்குரிய நிலுவை வருமான அறிக்கைகள் 2017 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) சமூக பொறுப்பு வரியின் நிலுவை வருமானம் காணப்படுதல் அரச நிறுவனங்களிலேயே என்பதுவும், அந்த கடன்கள் திறைசேரியின் அங்கீகாரத்துடனேயே வழங்கப்பட்டிருந்தமையால், எஞ்சிய பாதீட்டு நிதியேற்பாடுகளில் குறித்த நிலுவை வருமானங்களை அறவிடமுடியுமென இலங்கை சுங்கத்தினால் 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமான அறிக்கைகளின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், திணைக்களத்தினால் அதற்கமைய செயற்பட்டு நிலுவை வருமானங்களை பெற்றுக்கொள்ளவோ அல்லது அந்த நிலுவை வருமானங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கத்தினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்த தகவல்களுக்கமைய, 2016 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வருமான மீதிகள் மற்றும் வருமானக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த மீதிகளுக்கிடையே ரூபா 2,527,281 தொகையான வேறுபாடு நிலவியது.

(vii) நிலுவை வருமானங்களை அறவிடுவதற்காக அடிக்கடி நினைவுறுத்தல் கடிதம் அனுப்பப்படுவதாக கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒவ்வொரு பிரிவுகளுக்குரிய நிலுவை வருமானம் தொடர்பான தகவல்களும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) 20.05.01.00 ஆம் வருமானக் குறியீடு - மத்திய வங்கி இலாபம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருமானக் குறியீட்டின் கீழ் கடந்த வருடத்தின் போது வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை எனினும், மீளாய்வாண்டிற்கான பிரதான மதிப்பீடு ரூபா 12,000 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் அந்த மதிப்பீடு ரூபா 5,000 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது இலங்கை மத்திய வங்கியின் நிதிக்கூற்றுக்களுக்கமைய, வரிக்கு பின்னரான தேறிய இலாபத்திலிருந்து திரண்ட நிதியத்திற்காக ஒதுக்கப்பட்ட இலாபம் ரூபா 6,378.27 மில்லியனாக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது மத்திய வங்கியின் இலாப வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 5,000.00 மில்லியன் தொகையான தேறிய வருமானமொன்று கிடைத்திருந்தது. இதன்போது சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக்களின் வட்டி செலுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1,300.00 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய பணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததாக திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை ஒரே தடவையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2002 மே மாதத்தின் போது மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற பெண் உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 64,488 தொகையான கடன் மீதி 6 வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற போதிலும், அந்த கடன் மீதியினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிபெறுப்பும்

**வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டம்**

திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் பெறுகைகள் திட்டம் ஆகியவற்றுக்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பெறுகைகள் திட்டம் பாதீட்டு மதிப்பீட்டுடன் இணங்கவில்லை.

### 3.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பொறுப்புக்கள் பதிவேட்டிற்கமைய நிதி அமைச்சிற்கு செலுத்த வேண்டிய ரூபா 182,000 தொகையான பொறுப்புக்கள் கணக்காய்வு திகதியான 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | |
| (i) XV ஆம் அத்தியாயத்தின் 9.6 ஆம் பிரிவு | 47,450 | வெளிநாடு சென்ற மூன்று உத்தியோகத்தர்களுக்கு வெப்ப ஆடை படிகளாக ரூபா 47,450 செலுத்தப்பட்டிருந்தது. தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் அதற்காக செலவிடப்பட்டதாக உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் கூடிய விரைவில் உரிய உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த சான்றிதழ்கள் வெளிநாட்டு பயணத்தின் பின்னர் நாடு திரும்பிய 03 மாதங்கள் முதல் 06 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (ii) XV அத்தியாயத்தின் 9.4 ஆம் பிரிவு | - | வெப்ப ஆடை படிகள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படக் கூடிய போதிலும், அது தொடர்பில் உறதிப்படுத்திக் கொள்வதற்காக பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) திணைக்களத்தினால் அரசின் ஒட்டுமொத்த வருமானத்தை எதிர்வுகூறல் தொடர்பில் செயற்பட்டுள்ள விதம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டிற்கமைய, அரசின் மொத்த வருமானம் ரூபா 2,005 மில்லியனாக இருந்ததுடன், உள்ளபடியான வருமானம் ரூபா 1,725 மில்லியனாக இருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 86.03 சதவீதமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் 32 வருமானக் குறியீடுகளின் கீழ் மதிப்பிடப்பட்ட வருமானம் 10 சதவீதம் முதல் 3098 சதவீதம் வரையான வீச்சளவினால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 32 வருமானக் குறியீடுகளில் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் குறைவாக வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii). மீளாய்வாண்டின் போது 47 வருமானக் குறிகளுக்குரிய வருமான மதிப்பீடுகள் திருத்தப்பட்டிருந்தன. அவற்றுள் 32 வருமானக் குறியீடுகளின் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு 11 சதவீதம் முதல் 2,775 சாவீதமான வீச்சிலான அளவினை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும், 15 வருமானக் குறியீடுகளிலிருந்து திருத்தப்பட்ட மதிப்பீட்டு வருமானத்தில் 13 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான அளவினால் வருமானங்களை சேகரிக்க முடியாதிருந்தது.

(iii). முன்னைய ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் சில வருமானக் குறியீடுகளின் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மதிப்பீடொன்றோ அல்லது திருத்தப்பட்ட மதிப்பீடொன்றோ தயாரிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அந்த வருமானக் குறியீடுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த வருமானக் குறியீடுகளிலிருந்து நிலுவை வருமானங்கள் சேகரிக்கப்படுகின்றதெனவும் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(iv). பிரதான வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வருமானம் கழிக்கப்பட்டு வருமான மதிப்பீடு திருத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அவ்வாறு திருத்தப்பட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த 09 வருமானக் குறியீடுகளிலிருந்து, ஆரம்ப வருமான மதிப்பீட்டினையும் விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய அந்த வருமானக் குறியீடுகளின் வருமான மதிப்பீடுகளை திருத்துதல் உண்மைத் தன்மையுடன் இடம்பெற்றிருக்கவில்லை.

(v). பிரதேச சபை மற்றும் நம்பிக்கை பொறுப்பு வருமானத்திற்காக (Developed Revenue) உள்ளபடியான வருமான விபரங்களை சேகரித்தல் தொடர்பான பதிவுகள் வைத்திருப்பதாக அல்லது பகுப்பாய்வான்று மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi). 1002.05.02 ஆம் இலக்க மது வரிக்கான வருமானக் குறியீட்டிற்கான பிரதான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்த வருமானக் குறியீட்டிற்காக ரூபா 50 மில்லியன் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவிதமான வருமானமும் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii). 02 வருமானக் குறியீடுகளுக்குரிய ரூபா 151,230 மில்லியன் கூட்டுத்தொகையான ஆரம்ப மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் போது அவற்றுள் வருமானமாக ரூபா 5,000 மில்லியன்

மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. வருமானக் குறியீடுகளிலிருந்து வருமானம் சேகரித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமையால் அந்த வருமானக் குறியீடுகளின் வருமான மதிப்பீடுகளை திருத்தம் செய்வதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii). வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடுகளை கருத்திற்கொள்ளாது, அதனை விடக் கூடிய மதிப்பீடுகள் / திருத்தங்களை மேற்கொண்டமையின் காரணத்தால் மதிப்பீடுகள் மற்றும் உள்ளபடியான வருமானம் ஆகியவற்றுக்கிடையிலான விலகல்கள் அதிகரித்த சந்தர்ப்பங்களும் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் முன்வைக்கப்படுகின்ற மதிப்பீடுகள் / திருத்தப்பட்ட மதிப்பீட்டு பெறுமதிகளைப் போன்றே ஒட்டுமொத்த பொருளாதார விலகல்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விலகல்கள், அந்நிய செலவாணி விகிதம், வட்டி விகிதம் போன்றவற்றின் எதிர்பார்க்கப்பட்ட நடத்தை முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் முதல் மாதங்கள் சிலவற்றின் வருமானச் செயலாற்றல் போன்றன தொடர்பில் கவனம் செலுத்தி திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமென திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவித்திருந்தது.

(ix). அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் அல்லது உரிய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒவ்வொரு வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய வருமானம் தொடர்பான விரிவான தகவல்கள் உள்ளடங்கிய வழிகாட்டிகள் / அறிவுரைகள் வெளிப்பட்டிராமையின் காரணத்தினால் தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டவாறு வருமானத்திலிருந்தான மீள் செலுத்தல்களைப் போன்றே தவறுகளை திருத்துதலும் முன்னைய வருடத்தினை விட அதிகரித்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய சுனாமி மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக பிற்போடப்பட்ட பெறுமதி சேர் வரி (VAT) சலுகைகளை வழங்குதல் பணியொன்றாகவிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,676,375 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி பெறுமதி சேர் வரி வசதிகள் அம்பாறை, கல்முனை பிரதேசத்தில் அமைந்துள்ள சரஸ்வதி வித்தியாலயத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒப்பந்த நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்குரிய தகவல்களாக 2007 நவம்பர் 12 ஆந் திகதி வரிப் பற்றுச்சீட்டின் பிரதியொன்று மற்றும் People in need மேவுகைக் கடிதத்தின் கீழ் 2014 ஏப்ரல் 07 ஆந் திகதி திணைக்களத்திற்கு நேரடியாக அனுப்பப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் நிழற்படப் பிரதிகள் அனுப்பப்பட்டிருந்தன. இந்த கொடுப்பனவுகளுக்காக அந்த தகவல்களை தவிர எந்த தகவலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய வருடத்தின் கணக்காய்வின் போது சுட்டிக்காண்பிக்கப்பட்டவாறு சுனாமி வரிச் சலுகையினை வழங்குவதற்காக நாளதுவரையாக்கப்படாத செயற்திட்ட பதிவேடொன்று திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவுகள் தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானமொன்றினை எதிர்பார்த்து முன்பு போல கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டவாறு இருந்தது. அந்த பதிவேட்டிற்கமைய செயற்திட்டத்திற்காக ரூபா 39,376,949 தொகையான பெறுமதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 27 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளின் சதவீதம் பூச்சியப் பெறுமதியினைக் கொண்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட வரித் தொகையின் உரிய அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிட்டு 238-1-1-0-1405 செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு உரிய வரித் தொகை விடுவிக்கப்பட்டு,

அது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிக்கையொன்றினை வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் 18 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பெறுமதி சேர் வரி விலக்களிப்புக்களுடன் தொடர்புடைய அறிக்கை 03 மாதங்களுக்கு ஒரு தடவை நிதி அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. 2016 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் அரச சார்பற்ற அமைப்புக்களால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் மூலம் வழங்கப்படும் மானிய உதவிகளின் அடிப்படையில் நாட்டிற்கு கொண்டு வரப்படும் பொருட்களுக்காக சொத்துக்களின் அடிப்படையில் அறவிடப்படும் பெறுமதி சேர் வரி விலக்களிப்பு நிறுத்தப்பட்டிருந்ததாகவும், அதற்கமைய அத் திகதியின் பின்னர் அதற்குரிய அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பதும் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தால் இறுதியாக 2016 யூன் 01 ஆந் திகதி முதல் ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையான காலத்திற்குரிய அறிக்கையொன்று மாத்திரம் வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 126,132,194 ஆகும்.

### 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.
திணைக்களத்தால் நிதி அமைச்சின் ஆண்டறிக்கையை அச்சிடுவதற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்குரிய அந்த அறிக்கைகள் நிதி அமைச்சினால் அச்சிடப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்கள் மற்றும் அச்சீட்டுத் தெவைப்பாடாக தயாரிக்கப்பட்டிருந்த பதிவேட்டிற்கமைய, அச்சிடப்பட்ட அறிக்கைகளின் (சிங்களம்) 75 சதவீதம் அளவானவை பாடசாலைகளுக்காக அச்சிடுவதற்கு திட்டமிட்டிருந்தது. எவ்வாறெனினும், 2016 யூன் மாதத்தினுள் கிடைத்திருந்த சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் பிரதிகளில் முறையே 2800, 1300, 1150 ஆக இருந்த போதிலும், அவற்றுள் முறையே 2276, 635, மற்றும் 794 பகிர்ந்தளிக்கப்படாது எஞ்சியிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு எஞ்சியிருந்த அறிக்கைகளின் ஒரு பகுதி ரூபா 1,007,675 செலவிடப்பட்டு தபால் மூலம் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கைகளின் மொத்தக் கிரயம் ரூபா 5,645,386 ஆக இருந்தது. தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணையத்தில் இந்த அறிக்கைகளை பரிசோதிக்கும் இயலுமை காணப்படுகின்ற போது இவ்வாறு தேவைப்பாட்டினை விஞ்சி அறிக்கைகளை அச்சிடல் சிக்கனமற்ற செயற்பாடொன்று என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.9 மனிதவள முகாமைத்துவம்

#### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினா் தொடா்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 14 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 23 | 16 | 07 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 11 | 03 |
| | **மொத்தம்** | **60** | **43** | **17** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருடங்களாக சிரேஷ்ட மட்டத்தின் 04 பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுவதுடன், அந்த பதவிகளின் தேவைப்பாடு தொடர்பில் மீளாய்வு செய்து பொருத்தமான தீர்வொன்றினை பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறெனினும் அலுவலகத்தில் இடவசதி போதியளவில் காணப்படாமையால் இந்த வெற்றிடங்களை நிரப்புதல் இடம்பெறவில்லையென திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களம் ஆரம்பம் முதல் சிரேஷ்ட பொருளியலாளர், பொறியியல் விஞ்ஞானி, புள்ளி விபரவியலாளர் போன்ற 03 வெற்றிடங்கள் நிலவிய போதிலும், 2016 ஆம் ஆண்டின் பதவியணி மீளாய்வின் மூலம் அந்த தகவல்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. எனினும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள பெண் உத்தியோகத்தர் ஒருவர் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 02 வருடங்களுக்காக அமைச்சின் வரி ஆலோசகர் பதவியில் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பெண் உத்தியோகத்தரின் சேவை மீண்டும் 02 வருடங்களில் அல்லது 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது.

(இ) அவ்வாறே மூன்றாம் நிலையின் மொழிப்பெயர்ப்பாளர் பதவியொன்றும் பல வருடங்களாக வெற்றிடமாக நிலவியதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவைப்பாடொன்று ஏற்படவில்லை என திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.